**SL No: SIMTPB01** **Code No: JL012021**

**SET: 01**

Roll No. | | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

| | குறிப்பு | | NOTE |
|---|---|---|---|
| (I) | இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **23** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும். | (I) | Please check that this question paper contains [ ] printed pages. |
| (II) | வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும். | (II) | Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate. |
| (III) | இந்த வினாத்தாளில் **16** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும். | (III) | Please check that this question paper contains **14** questions. |
| (IV) | எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும். | (IV) | Please write down the Serial Number of the question in the answer-book before attempting it. |
| (V) | வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது. | (V) | 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period. |

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* *மொ. மதிப்பெண்கள் : 80*

*Time allowed : 3 hours* *Maximum Marks : 80*

## பகுதி–அ(section A) 40 MARKS

**1.அ. பின்வரும் பத்தியைப் படித்துப்பொருள் உணர்ந்து, தொடர்ந்து வரும் பல் விடை வினாக்களுக்கு விடை எழுதுக.** **5×1=5**

நான் என்ற நிலை மாறி 'நாம்' என்ற நிலையைப்பெறும்போது,ஒருவர் உயர்வு எய்துகிறார். மன்னவனாய்ப் பிறந்தாலும் தம்முன் கோடு போட்டுக்கொண்டு குறுகிய வட்டத்துள் சிறை படாமல் அன்பெனும் கோட்டையைப் பிடித்தவர் புத்தர். எங்கு மனித நேயம் மலிந்துள்ளதோ அங்கு சமூகத்தொண்டு நிறைந்திருக்கும். எங்கு சமூகப் பணிகள் சிறப்பாக உள்ளதோ அங்கு மாணவர்கள் முதன்மையானவராக இருப்பர். மாணவர்கள் மனம் வைத்தால் கல்லும் மண்ணும்புல்லாகும். புல்லும் நெல்லாகும். மாணவர்கள் விரைந்தோடும் நதியொத்தவர்கள். சரியான பாதையைக் காட்டுதல் அவசியம். “விளையும் பயிர் முளையிலேயே தெரியும்” என்னும் பழமொழியை எண்ணி இளமையிலேயே தொண்டு செய்யும் மன உணர்வை ஊட்ட வேண்டும் .’பிறப்பினால் எவர்க்கும் பேதமில்லை’ என்னும் தன்மைக்கேற்ப சாதி மத பேதமற்ற மன உணர்வாய் மாற்றப்படுதல் வேண்டும். மாணவப் பருவத்தில் தங்கள் விருப்பத்திற்கு இணங்க பல்வேறு இயக்கங்களில் மாணவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம். சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய இளைஞர் படை என இதுபோல பலமாணவர்களுக்காகஅமைக்கப்பட்டவை. இவற்றில் இணைந்து மாணவர்கள் சமூகத் தொண்டாற்றலாம்.

**வினாக்கள்**

1. ஒருவர் எப்போது உயர்வு எய்துகிறார்?
   அ. ஒருவர் தன் நிலை மாறுபடும் போது.
   ஆ. ‘நான்’என்ற நிலையும் 'நாம்’என்ற நிலையும் வரும்போது.
   இ. ‘நான்’என்ற நிலை மாறி'நாம்’என்னும் நிலையைப்பெறும்போது.
   ஈ.’நாம்’என்ற நிலை மாறி'நான்'என்னும் நிலையைப் பெறும்போது.

2. புத்தர் எத்தகையவர்?
   அ. அன்பெனும் கோட்டையைப் பிடிக்க முற்பட்டார்.
   ஆ. அன்பெனும் கோட்டையைப்பிடிக்கத் தவறினார்.
   இ. அன்பெனும் கோட்டையைப் பிடித்தவர்.
   ஈ. அன்பெனும் கோட்டையைப் பிடிக்கப்போராடினார்.

3. சமூகத் தொண்டு எங்கும் நிறைந்திருக்கும்?

அ.மனிதநேயம் மலிந்துள்ள. இ. மனிதநேயம் அதிகமுள்ள

ஆ. மனிதநேயம் இல்லாத. ஈ. மனிதநேயம் என்பதை அறியாத

4. மாணவர் பணிகள் எங்கு முதன்மைப்பெறும்?

அ. சமூகப் பணிகள் சிறப்பாக இல்லாத இடத்தில்

ஆ. சமூகப் பணிகள் பற்றி அறியாத இடத்தில்

இ. சமூகப் பணிகள் சிறப்பாக உள்ள இடத்தில்

ஈ. சமூகப்பணிகள் குறைவாக உள்ள இடத்தில்

5. மாணவர்கள் எதையொத்தவர்கள்?

அ. மெல்ல ஓடும் நதி. இ. கலங்கம் உள்ள நதி

ஆ. விரைந்தோடும் நதி. ஈ. மேட்டிலிருந்து பாயும் நதி

**(அல்லது)**

**ஆ. பின்வரும் பத்தியைப் படித்துப் பொருள் உணர்ந்து, தொடர்ந்து வரும் பல் விடை வினாக்களுக்கு விடையளி:**

தமிழ்மொழியின் சிறப்பை மறுக்க எவராலும் முடியாது. இது தமிழர்களுக்கான கருத்தாகும். ஆனால் தற்போதைய உலக நடத்தை தமிழ் என்னும் இனிய மொழியை கொச்சைப்படுத்தும் படியாக உள்ளது. தமிழர்கள் தம் உறவினர் - நண்பர்களிடமே ஆங்கிலத்தில் பேசுகின்றனர். தமிழில் பேச வெட்கப்படுகிறார்கள். இது வருத்தப்படுவதற்குரிய செயல். ஏனெனில் தமிழில் பேச மறுப்பதற்கு அவர்கள் தான் வெட்கப்பட வேண்டும்.

மொழிகள் பிறப்பதற்கு முன்னரே தமிழ்மொழி பிறந்துவிட்டது. மேலும் பாரதியார்,ஔவையார் போன்ற முத்தமிழ் கவிஞர்கள் உரையாடியது தமிழில் தான். உலகப் புகழ்பெற்ற திருக்குறள் எழுதப்பட்டதும் தமிழிலே அன்றி ஆங்கிலத்தில் அல்ல என்பதை நாம் ஒரு கணம் சிந்திக்க வேண்டும். மலையாளம், தெலுங்கு போன்ற பிறமொழிகள் பிறந்ததும் தமிழில் இருந்துதான். எனவே இம்மொழிகள் தமிழின் கிளைகளே தவிர கனிமொழி இல்லை.

**வினாக்கள்**

1. தமிழர்கள்தம்உறவினர்களிடம்எம்மொழியில் பேசுகிறார்கள்?
   அ. ஆங்கிலத்தில். ஆ. தெலுங்கில். இ. சமஸ்கிருதத்தில். ஈ. தமிழில்
2. பாரதியார்,ஔவையார் ஆகியோர் எம்மொழியில் பேசினார்கள்?
   அ. ஆங்கிலத்தில்ஆ. தமிழில். இ. வடமொழியில். ஈ. கன்னட மொழியில்
3. உலகப் புகழ்பெற்ற எந்த நூல் தமிழில் ஏற்றப்பட்டது?
   அ. ஆத்திச்சூடி. ஆ. நாலடியார்இ. திருக்குறள்ஈ.சிலப்பதிகாரம்
4. மலையாளம் மற்றும் தெலுங்கில் பிறப்பைப் பற்றி எழுதுக.
   அ. வடமொழியில் பிறந்த கிளைமொழிகள்
   ஆ. திராவிட மொழியில்பிறந்த கிளைமொழிகள்
   இ. தமிழ் மொழியில் பிறந்த கிளைகளே
   ஈ. தமிழ் மொழியில் பிறவாமல், தனியே தோன்றின

5. எவ்வளவு நேரம் சிந்திக்க வேண்டும்?

அ. ஓராண்டு ஆ. ஒரு திங்கள். இ. ஒரு யுகம். ஈ. ஒரு கணம்

**2.அ. பின்வரும் பத்தியைப் படித்துப்பொருள் உணர்ந்து, தொடர்ந்து வரும் பல் விடை வினாக்களுக்கு விடையளி:** **5×1=5**

நம்முடைய நாட்டின் கண் பழைய காலத்தில்கல்வி வளர்ச்சி அடைவதற்கு மிக முக்கிய காரணமாக இருந்தவர்கள் புலவர்கள். அவர்களுடைய வாழ்க்கைக்குரிய சாதனங்களை வழங்கி, அவர்களுக்கு ஊக்கம் அளித்து வந்தவர்கள் மன்னர்களும், ஜமீன்தார்களும், பிரபுக்களும் ஆவார்கள். இந்நாட்டில் இருந்த சேர, சோழர், பாண்டியர்களும் குறுநில மன்னர்களும் தங்களுடைய ஆஸ்தானங்களில் பல புலவர்களைக் கூட்டி ஆதரித்து, அப்புலவர்களால் தமிழ்நூற்பெருக்கமும், தம்புகழ் வளர்ச்சியும் உண்டாக செய்தனர். புலவர்களால் புகழப் பெறுவதையே சிறந்த மதிப்பாகக் கருதினர். புலவரால் பாடப்பெறாவிடின் அது வாழ்க்கைப்பயனை இழந்தது போலாகும் என்று அவர்கள் எண்ணினர்.

**வினாக்கள்:**

1. புலவர்களின் வாழ்க்கைக்குரிய சாதனங்களை வழங்கியவர்கள்................
   அ. பிரபுக்கள். ஆ. விவசாயிகள். இ. அறிஞர்கள். ஈ.மக்கள்

2.மூவேந்தர்கள் எனப்படுபவர் யார்?
   அ. புலவர்கள், மன்னர்கள், பிரபுக்கள்
   ஆ. கம்பர், பாரதி, பாரதிதாசன்
   இ. சேர, சோழர், பாண்டியர்
   ஈ. புலவர்கள்,மன்னர்கள், மக்கள்

3. புலவர்கள் எவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தனர்?
   அ. புகழ் வளர்ச்சிக்கு ஆ. நாட்டு வளர்ச்சிக்கு
   இ. கல்வி வளர்ச்சிக்கு . படை வளர்ச்சிக்கு

4. புலவரால் பாடப்பெறாவிடின் ஏற்படும் நிலை என்ன?
   அ.வாழ்க்கைப்பயனை இழத்தல்
   ஆ. செல்வ வளத்தின் இழத்தல்
   இ.பகையைப் பெருக்கிக் கொள்ளுதல்
   ஈ. பெரும் புகழை இழத்தல்

5. புலவர்களைக் கூட்டி ஆதரிக்கும் இடம்.........
   அ. இசை அரங்கம் ஆ. ஜமீன் இல்லம்
   இ. ஆஸ்தானங்கள் ஈ. அவை

**(அல்லது)**

**ஆ. பின்வரும் பத்தியைப் படித்துப்பொருள் உணர்ந்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடையளி:**

பட்டினத்தடிகள் அரசருக்கு ஈடாகப் பெருஞ்செல்வம் படைத்தவராக விளங்கினார். ஒருநாள் எல்லாவற்றையும் துறந்து விட்டுத் துறவியாகி விட்டார். அவரைக்காண அரசன் தன் சுற்றம் சூழ ஆரவாரத்துடன் வந்தான். அங்கு அரையாடை மட்டும் அணிந்த நிலையில் தவக்கோலத்தில் அமர்ந்திருந்தார் பட்டினத்தடிகள். அவரை வணங்கி அரசன், "எமக்கு இணையாகச் செல்வம் படைத்திருந்த நீங்கள் இன்று கண்ட பயன் என்ன?" என்று கேட்டார். அதற்குப்பட்டினத்தடிகள், "நீர் நிற்க, நான் இருக்க இந்தச் சிறப்பு ஒன்று போதாதா?"என்று பதிலளித்தார். செல்வம் இருக்கும் போதும்,இழந்த போதும் நாம் தன்னடக்கத்துடன் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

**வினாக்கள்:**

1. பட்டினத்தடிகள் அரசருக்கு ஈடாக................ கொண்டிருந்தார்.
   அ. பெருஞ்செல்வம்　　ஆ. அணிகலன்கள்
   இ.புகழ்.　　ஈ. சுற்றத்தினர்
2. செல்வம் இருக்கும் போதும் இழந்த போதும் நாம் எப்படி இருக்க வேண்டும்?
   அ. ஆரவாரத்துடன்.　　ஆ. தன்னடக்கத்துடன்
   இ. பற்றுடன்.　　ஈ. மகிழ்ச்சியுடன்
3. துறவி கண்ட பயன் என்ன?
   அ. அரசன் இருக்க, பட்டினத்தார் நிற்க
   ஆ. பட்டினத்தார் இருக்க, அரசன் நிற்க
   இ. அரசன் நிற்க, பட்டினத்தார் நிற்க
   ஈ. பட்டினத்தார் இருக்க,அரசன் இருக்க
4. துறவுக் கோலத்தில் அமர்ந்திருந்தவர் யார்?
   அ. துறவி.　ஆ. அரசன்.　இ. அமைச்சர்.　ஈ. பட்டினத்தார்
5. சுற்றம் சூழ ஆரவாரத்துடன் வந்தவர்................
   அ. துறவி.　ஆ. பட்டினத்தார்.　இ. அரசன்.　ஈ. நண்பர்

## இலக்கணப் பகுதி:

**3. சான்று தருக (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)　　4×1=4**

1. சொல்லிசை அளபெடை
   அ. உரனசைஇ.　ஆ.அம்மாஆ.　இ. கெடுப்பதூஉம்.　ஈ.எஃகு
2. வேற்றுமைத்தொகை
   அ. நீர் பருகினான்.　ஆ. படித்தான்கண்ணன் இ. ஊறுகாய்.　ஈ. தேன்மொழி

3 வினையெச்சத் தொடர்
   அ.பாடினான் முடித்தான்.　　ஆ. பாடி முடித்தான்
   இ. பாடலை முடித்தான்.　　ஈ.வா! வா!

4. குறிஞ்சி
   அ. தஞ்சை.　ஆ. சென்னை.　இ. உதகை.　ஈ. திருநெல்வேலி
5. திணை வழாநிலை

அ. கண்ணகி வந்தான் ஆ. கண்ணகி வந்தது
இ. கண்ணகி வந்தாள் ஈ. வந்தாள்கண்ணகி

**4. கூறியவாறு செய்க. (எவையேனும் நான்கனுக்குமட்டும்). 4×1=4**

1.எஃகு (ஒற்றளபெடையாக மாற்றுக)
அ.எகு ஆ.எஃஃகு. இ.எக்கு. ஈ.எங்கு
2.மலர் (தொடர்மொழியாகமாற்றுக)
அ. மலர்விழி. ஆ. மலர்ந்தது. இ. மலர் படித்தாள். ஈ. மலரும்.
3.கொல்லுதல்(எதிர்மறைத்தொழிற்பெயராகமாற்றுக)
அ.கொல். ஆ.கொல்லல். இ.கொல்லாமை. ஈ.கொல்லு
4.பாம்பு. (இருபெயரொட்டுப் பண்புத்தொகை மாற்றுக)
அ. சாரைப்பாம்பு. ஆ.பாம்புபுற்று
இ.பாம்புபாம்பு. ஈ. ஓடியபாம்பு
5. தென்னந் தோட்டம் (வழாநிலாயாக மாற்றுக)
அ. தென்னம் காடு. ஆ. தென்னஞ்சோலை
இ.தென்னந்தோப்பு. ஈ.தென்னம்வயல்

**5.இலக்கணக்குறிப்புத்தருக. ( எவையேனும்நான்கனுக்கு மட்டும்) 4×1=4**

1. அரண்மனை
அ. தனிமொழி. ஆ. தொடர்மொழி. இ. பொதுமொழி. ஈ. எதிர்மறை மொழி
2. அரசனே! நீயே எங்களுக்கு தாய்.
அ. கால வழுவமைதி. ஆ. திணை வழுவமைதி
இ. பால் வழுவமைதி. ஈ. இட வழுவமைதி
3.பறந்தது.
அ. தன்மை. ஆ. முன்னிலை. இ. படர்க்கை. ஈ. தன்மை ஒருமை
4. இச்செயலைச்செய்தது மங்கையா? மணிமேகலை?
அ. அறியா வினாஆ. அறிவினா. இ. ஐய வினா. ஈ. கொடை வினா
5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
அ. நிரல்நிறைப்பொருள்கோள். ஆ. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
இ.தாப்பிசைப் பொருள்கோள். ஈ. மொழிமாற்றுப் பொருள்கோள்

**6.நிரப்புக.(அனைத்து வினாக்களுக்கும் விடையளி). 4×1=4**

1.”தொக்கி “ என்ற சொல்லின் பொருள்.................
அ. வெளிப்பட்டு. ஆ. மறைந்து. இ. இயல்பான. ஈ. கடினமான

2.முற்றுப்பெறாத வினை,வினைச்சொல்லைத்தொடர்வது............
அ. உவமைத் தொடர் ஆ. விளித்தொடர்
இ. வினையெச்சத் தொடர். ஈ. எழுவாய்த் தொடர்.
3. “கடைக்குப் போவாயா?” எனில் ‘போக மாட்டேன்’ எனக் கூறுவது...........

அ. சுட்டு விடை. ஆ ஏவல் விடை.
இ. மறை விடை. ஈ. இனமொழி விடை

4. இலக்கணம் முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும்.......... எனப்படும்.
அ. வழாநிலை. ஆ.வழு. இ. வழுவமைதி. ஈ. பொது

**7. பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல் விடை வினாக்களுக்கு விடையளி : 5×1=5**

“அங்கு கழைநரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்புஅடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல் வேள் வயிரியம் எனினே.”

**வினாக்கள்:**

1. இச்செய்யுள் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
   அ. முல்லைப்பாட்டு. ஆ. பரிபாடல்இ. மலைபடுகடாம். ஈ. காசி காண்டம்
2. இச்செய்யுளின் ஆசிரியர் யார்?
   அ. நப்பூதனார். ஆ. பெருங்கௌசிகனார். இ. கீரந்தையார். ஈ. நக்கீரர்
3. இந்நூலின் வேறு பெயர் என்ன?
   அ. நெடுநல்வாடை. ஆ. குறிஞ்சிப்பாட்டு.
   இ. திருமுருகாற்றுப்படை ஈ. கூத்தராற்றுப்படை
4. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?
   அ.நன்னன். ஆ.பாண்டியன். இ.பாரி. ஈ.சோழன்
5. நரலும்- இதன் பொருள் யாது?
   அ. நடக்கும். ஆ. சுற்றும். இ.மின்னும். ஈ.ஒலிக்கும்

**8.பின்வரும் உரைப் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் பல் விடை வினாக்களுக்கு விடையளி:. 5×1= 5**

“ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு” என்கிறார் மணவை முஸ்தபா. “ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்புஇன்றியமையாததாகும்;உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்” என்கிறார்மு.கு. ஜகந்நாதராஜா. மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார். “மகாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச்சங்கம் வைத்தும்”என்னும் சின்னமனூர்ச்செப்பேடுக் குறிப்பு , சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

**வினாக்கள்:**

1. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவதற்குஎன்னபெயர்?

அ. மொழிக் கூறு.   ஆ. மொழிபெயர்ப்பு.  இ. மொழிக் கல்வி.  ஈ. மொழிநூல்

2. உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும் என்றவர் யார்?
   அ. மணவை முஸ்தபா   ஆ. தொல்காப்பியர்.
   இ.மு.கு. ஜகந்நாதராஜா.   ஈ. பாரதி
3. மொழிபெயர்த்தல்என்ற தொடரைத் தொல்காப்பியர் எந்த இயலில் குறிப்பிட்டுள்ளார்?
   அ. மரபியல்ஆ.செய்யுளியல்   இ.சொல்லியல்   ஈ.எழுத்தியல்

4.மொழி வளம் பெறவும் உலகத்தோடு தொடர்பு கொள்ளவும் எது அவசியம்?
   அ. இலக்கியம்.  ஆ.மொழிபெயர்ப்பு. இ. கவிதைகள்.  ஈ.உரைநடைகள்

5.சங்க காலத்தில் தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துவது எது?
   அ.சின்னமனூர்ச் செப்பேடு.   ஆ. சோழர் செப்பேடு.
   இ. பாண்டியர் செப்பேடு   ஈ. ஆனைமங்கலம் செப்பேடு

**9.விடுபட்ட சீர்களை நிரப்புக:** **4×1=4**

1. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
   .................... நின்றான் இரவு.

அ.வேரொடு.  ஆ.கோலொடு.   இ.பேணி.   ஈ.அறிவொடு

2 கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் ................ கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.
அ.இல்லார்க்.   ஆ.உள்ளார்க்.   இ.செல்லார்க்.   ஈ.பல்லார்க்

3இகழ்ந்தெள்ளாதீவாரைக்காணின்....................
உள்ளும் உவப்பதுடைத்து.
அ.இன்மை.   ஆ.அறத்து.   இ.உவப்ப.   ஈ. மகிழ்ந்துள்ளம்

4.தொழுதகையுள்ளும்படையொடுங்கும்ஒன்னார்
அழுதகண்ணீரும்.................
அ.அமைச்சு.   ஆ.பொருள்.   இ.வினை.   ஈ.அனைத்து

**பகுதி – ஆ**(SECTION – B)40 MARKS

10.**எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி**:   2×3=6

1.வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

2. இறைவன்,புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

3. கூத்தனைக்கூத்தன்ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

4. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

**11. எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி: 3×4=12**

1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.
2. எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவினால்ஏற்பட இருக்கும் மாற்றங்களை விவரி.
3. பொய்க்கால் குதிரையாட்டம் மற்றும் தெருக்கூத்துக் கலை பற்றிஎழுதுக.
4.மனிதனால் காற்று எவ்வாறெல்லாம் மாசுபடுகிறது என்பதனையும் மாசைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளையும் எழுதுக.
5. மொழிபெயர்ப்புக் கல்வியின் பயன்கள் குறித்து எழுதுக.

**12. ஏதேனும் ஒரு துணைப்பாடத்தலைப்பினைக்கட்டுரை வடிவில் எழுதுக.**
**1×7=7**

1. கோபல்லபுரத்து மக்கள்
2. பாய்ச்சல்
3. புதிய நம்பிக்கை

**13. பின்வரும் காட்சியை கண்டு கவினுற வரைக. (3)**



**14. ஏதேனும் ஒரு கடிதம் எழுதுக. 1×6=6**

1. அரசால் தடை செய்யப்பட்ட நெகிழிப் பொருட்களைப்பயன்படுத்தும் , உங்கள் பகுதி வணிகர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

(அல்லது)

2.உனக்குப் பிடித்த ஆளுமைத் திறன் மிக்க விளையாட்டு வீரர் குறித்து நண்பனுக்கு கடிதம் எழுதுக.

குறிப்பு: (இரண்டு கடிதங்களிலும் உன் முகவரி: க. பொன் மகன்/பொன்மகள்,எண்.14, தெற்குவீதி, மதுரை – 16எனக் கொள்க.)

(அல்லது)

3.கொரொனாபெருந்தொற்றுநிலவும்சூழலில்எவ்வாறு பொழுதைக் கழித்தாய் என்பதை உன் நண்பனுக்கு மின்னஞ்சல் கடிதம் எழுதுக.

(உன்முகவரி: வளவன் @ ஜிமெயில்.காம்)

**15.ஏதேனும் ஒரு பகுதியில் உள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. 1×6=6**

1.தலைப்பு-குறிப்புச்சட்டகம்-முன்னுரை -என் தோற்றம்-காவி நிறம்-வெண்மை நிறம்-பச்சை நிறம்-அசோகச் சக்கரம்-என்னைப் போற்றும் முறை-முடிவுரை.

2. தலைப்பு-குறிப்புச் சட்டகம்-நூலறிவு-நூலகங்களும் அவற்றின் வகைகளும்-பராமரிப்பும்பயனுள்ள படிப்பில் ஆர்வமும்-நூலகங்களில் படித்து உயர்ந்த சான்றோர்கள்-அவர்கள் போல யாவரும் சிறக்க முயலுதல்-முடிவுரை.
3. தலைப்பு-குறிப்பு சட்டகம்-முன்னுரை-மாசும், தூசும் உடல்நலம் கெடுப்பவை-மாசு ஏற்படக் காரணங்கள்-கட்டுப்படுத்த மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்-தனி மனிதன், சமுதாயம் ஆகியவர் கடமை-முடிவுரை.